**பொலன்னறுவை மாநகர சபை - 2022**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொலன்னறுவை மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் பொலன்னறுவை மாநகர சபையின் 2022 திசெம்பா 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்டதரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- ந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய

ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய வட்டி செலவு ரூபா 85,583 தொகை குறைத்து காட்டப்பட்டிருந்தது. | சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | கணக்கு காலப்பகுதிக்குரிய அனைத்து செலவுகளையும் இன்ங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 3,236,533 ஆன நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் ரூபா 205,000 ஆன முத்திரை கட்டணம் கிடைப்பனவு மீளாய்வாண்டில் நானாவித வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | கடந்த ஆண்டின் நடைமுறை வேலையாக காட்டியிருந்த ரூபா 7,781,329 ஆன வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டிலும் நடைமுறை வேலைகளாக காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | நிதிக்கூற்றுக்கயை சரியாக சமர்பிக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி பூர்த்தி செய்திருந்த ரூபா 8,129,739 ஆன பாதைகள், பாலம் மற்றும் மதகுகள் மற்றும் ரூபா 22,063,386 ஆன கட்டிடங்களின் பெறுமதி நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி தேறிய பெறுமதி ரூபா 21,675 ஆன டெப் இயந்திரமொன்று நிதிக்கூற்றுக்களில் ரூபா 216,750 ஆக காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டில் LDSP கருத்திட்ட ஏற்பாட்டின் மீது கிடைத்திருந்த ரூபா 5,282,051 பெறுமதியான விளையாட்டு உபகரண பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கி இருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | சபைக்கு சொந்தமான 06 நடமாடும் வியாபாரக் கூடங்களின் பெறுமதி ரூபா 1,560,000 ஆன போதும், நிதிக்கூற்றுக்களில் நடமாடும் வியாபார கூடம் 02 இன் பெறுமதி ரூபா 870,874 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | 03 இலத்திரனியல் நூலக், இற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 1,438,096 பெறமதியான உபகரணங்களில் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டி இருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | அரசின் மற்றும் மாகாணசபை நிறுவனங்களிலிருந்து கிடைத்த மொத்த மூலதன மானியம் ரூபா 45,089,831 நிதிக்கூற்றுக்களில் இனங்கண்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஒ) | இருப்பு பதிவேட்டின் பிரகாரம் மர்கரி மின்குமில்கள் இருப்பின் பெறுமதி ரூபா 51,430 ஆன போதும், நிதிக்கூற்றுக்களில்அவை ரூபா 514,300 ஆக ரூபா 462,870 கூடுதலாக காண்பிக்கப்ட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஓ) | 2021 ஆண்டில் தொடர்கிற கருத்திட்டங்களிற்காக மீளாய்வாண்டினுள் அரசின் மற்றும் மாகாணசபை நிறுவனங்களிலிருந்து கிடைத்த ரூபா 19,672,519 ஆன | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மூலதன மானியம் மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஔ) | களஞ்சிய பதிவேடுகள் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட ரூபா 1,270,689 ஆன 24 உறுப்படிகள் நிதிக்கூற்றுகளில் இருப்பிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | அனைத்து எஞ்சிய இருப்பு பெறுமதிகளும் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டும். |
| (க) | 22 களஞ்சிய உறுப்படிகளின் பெறுமதி சரியாக இனங்காணாததால் ரூபா 188,301 இனால் மீளாய்வாண்டு இறுதியில் இருப்பு நிதிக்கூற்றுக்களில் கூடுதலாக காட்டப்பட்டு இருந்தது. | - மேற்படி - | சரியான பெறுமதிகளை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிற்கு 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை மற்றும் அவைகளிற்க உரிய அட்டவணைகளின் மீதிக்கிடையில் ரூபா 274,040 ஆன வித்தியாசம் ஆனது. | சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | இனங்கம் செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான ஆவண சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிற்கு ரூபா 88,522,252 பெறுமதியான 05 கணக்கு விடயங்களின் மீதி உறுதிப்படுத்தல்கள், நாளாதுவரையாக்கப்பட்ட பதிவேடுகள், வருமான பதிவேடகள, வரவுப் பதிவேடு,வெளியேறும் பதிவேட மற்றும் செய்யப்பட்ட வேலை அறிக்கைகள் கணக்காய்விற்க சமர்ப்பிக்கப்டாதனால் திருப்திகரமாக பரிசோதிக்க முடியவில்லை. | சமர்ப்பிக்கப்பட்டதென. | சமர்ப்பிக்கப்ட்தாக குறிப்பிட்டுள்ள போதும், சமர்ப்பிக்கப்ட்டிருக்காத தனால் வழங்கப்படாத சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆகஸ்ட் 29 திகதிய இலக்கம் 2086/15 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி | மாநகர சபை முதல்வரால் பயன்படுத்தப்படும் கெப் வண்டிக்காக மாதாந்த அங்கீகார எரிபொருள் 400 லீற்றறை எல்லையை விஞ்சி 07 சந்தர்ப்பங்களில் எரிபொருள் 912 லீற்றர் பெறப்பட்டிருந்தது. | எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கான அங்கீகாரத்திற்கு உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளதென. | எல்லையை மீறிச் செல்லாத வகையில் நடவடிககை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தேசிய அரச சபையின் 1978 இலக்கம் 41 கொண்ட நகர அபிவிருத்தி சட்ட ஏற்பாடுகளை குறிப்பிட்டு வெளியிடப்பட்டிருந்த 2235/54 மற்றும் 2021 ஜுலை 08 திகதிய வர்த்தமானியின் vi பகுதியின் 83(1) பிரிவு | 2018 மற்றும் 2019 இரண்டு ஆண்டுகளில் கட்டிட திட்டங்களை அங்கீகரித்து அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றிருந்த 119 நபர்களினால் இணக்கப்பாட்டு சான்றிதழ் பெற்றிருக்கவில்லை. | இணக்கப்பாட்டு சான்றிதழ் பெற்றுக் கொள்ளுமாறு அறிவித்து முன்நடவடிக்கை எடுக்க குறித்துக் கொண்டுள்ளதென. | இணக்கப்பாட்டு சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத நபர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாநகர சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 29,640,178 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 12,003,474 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம்மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 28,984,000 | 28,984,000 | 26,338,179 | 27,087,606 | 24,793,647 | 43,559,956 | 22,523,966 | 24,441,785 |
| (ii) | வாடகை | 84,343,000 | 84,343,000 | 59,173,832 | 61,295,343 | 98,554,680 | 54,166,572 | 33,224,891 | 36,666,175 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 6,100,000 | 3,946,004 | 3,946,004 | 0 | 3,397,800 | 4,248,576 | 4,041,576 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 63,446,000 | 21,337,824 | 18,093,574 | 3,244,250 | 49,944,999 | 18,362,419 | 33,196,288 | - |
| | | -------------- | ------------- | ------------- | ------------- | -------------- | ------------- | ------------- | ------------- |
| | | 182,873,000 | 138,610,828 | 107,551,589 | 91,627,199 | 176,691,126 | 120,337,523 | 92,986,721 | 61,107,960 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை வீதவரி வருமானம் ரூபா 20,623,656 ஆனது. | தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வருமானத்தை தீர்த்துக் கொள்ள வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு அறவிட வேண்டிய கடை வாடகை வருமானம் ரூபா 52,697,010 ஆனதுடன், கிடைக்க வேண்டிய ஒரே தடவை செலுத்தும் பணம் ரூபா 16,084,890 தொகையானது. | நிலுவையை அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதென. | நிலுவை வருமானத்தை கால ரீதியாக அறவிட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு அறவிட வேண்டிய ஆதன குத்தகை வருமானம் ரூபா 8,598,332 ஆனது. | - மேற்படி - | ஆதன குத்தகையால் கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு 03 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவிவரும் கிடைக்க வேண்டிய சொத்துக்கள் குத்தகை வருமானம் ரூபா 3,033,274 ஆனது. | நிலுவையை அறவிட சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சட்ட அலுவலரிற்கு முன்வைத்துள்ளதென. | உரியவாறு கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | மாநகர சபையின் பழைய வாராந்த சந்தை 27 கடையறைகள் 2021 ஆண்டு முதல் நீர் மற்றும் மின்சார வசதி வழங்கப்படாததன் மீது வாடகை அறவிடப்படாததால் வருடாந்தம் ஈட்டிக் கொள்ள முடியுமான ரூபா 1,260,000 | கடையறை வாடகை அறவிடலை மின்சாரம், நீர் வசதி இல்லாத காரணத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. | வியாபார நிலையங்களிற்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | அளவான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு அறவிட வேண்டிய நிலுவை குப்பை கட்டண வருமானம் ரூபா 6,463,950 ஆனது. | நிலுவை குப்பை கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | நிலுவை வருமானத்தை உரியவாறு அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் பிரகாரம் மாகாண சபை செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2022 திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 160,000 தொகை மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 4,926,000 ஆனது. | குறித்த அதிகாரிகளிற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதென. | சபைக்கு கிடைக்க வேண்டிய குறித்த வருமானத்தை காலரீதியாக அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்றாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளல்

மாநகர சபை கட்டளை சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனை சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **கைவிடப்பட்ட கடமைகள்** | | |
| | 2021 ஆண்டில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் மானியத்தின் மீது ஆரம்பிக்கப்பட்ட ரூபா 42,091,260 ஆன ஒப்பந்த பெறுமதியான 08 கருத்திட்டங்கள் நிதி கிடைக்காததால் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தன. அக் கருத்திட்டங்களிற்காக கணக்காய்வு திகதியளவில் ரூபா 6,793,428 ஆன தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதும், அந்த வேலைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்த காரணத்தால் அந்நிதி விளைவற்ற செலவொன்றாக ஆகியிருந்தது. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட நிதி விளைவற்றுச் செல்லாதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| மாநகர சபை அதிகார எல்லையில் தினந்தோறும் திரட்டப்படும் மொத்த குப்பைகளின் அளவு 20 டொன்கள் ஆவதுடன், 2022 ஆண்டு முதல் 06 மாத காலத்தினுள் உற்பத்தி செய்திருந்த சேதனப் பசளை அளவு 21 டொன்களான குறைந்த அளவானது. | குப்பை கொட்டில் போதியதாக இல்லாததால் சனவரி முதல் ஜுலை வரையான காலத்தினுள் திரட்டப்பட்ட உக்கலடையும் கழிவுகள் வேறாக குவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கோரிக்கை பிரகாரம் தேவைக்கேற்ப மாத்திரம் பசளை உற்பத்தி செய்து பொதியிடுவதெேன. | திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக கூடிய கவனம் செலுத்த வேண்டும். |